கிறேன். அவர்களைப் பற்றி இனிமேல் நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள். ஜனங்களைப் பற்றி புரியாதவர்கள் ஜனநாயகத்தை வெளியிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

(ஈ) இரணியல் மின் வாரிய உதவிக் கோட்டத்தை குழித்துறை கோட்டத்தோடு இணைத்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏப். எம். இராசரத்தினம், "குமரி மாவட்டம், இரணியல் மின் வாரிய உதவிக் கோட்டம், தக்கலை மின்வாரிய கோட்டத்தில் இருந்து மாற்றி கேரள எல்லைக்கு அருகில் உள்ள குழித்துறை கோட்டத்தோடு இணைத்ததால் அப்பகுதி மக்கள் நிலை குறித்த" கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லை. அதற்கான அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

அறிக்கை.

கன்னியாகுமரி மின் அமைப்பில் தக்கலை கோட்டத்தில் வேலைப்பளு அதிகமாக இருந்ததால் கூடுதலாக ஒரு புதிய கோட்டம் குழித்துறையில் உருவாக்கப்பட்டது. ஆகவே இரணியல் உட்கோட்டம் குழித்துறை கோட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இரணியல் உட்கோட்டத்தின் பிரிவுகள் (செக்ஷன்ஸ்) இரணியல் உட்கோட்டம் ஆகியவற்றின் தலைமையிடங்கள் எதுவுமே மாற்றப் படவில்லை. அதனால் மின் நுகர்வோர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

(உ) முதுமலை சரணாலயத்தில் யானைகள் சுட்டுக் கொல்லப் படுவது குறித்து.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த ஒரு மாத காலத்திற்குள் உலகப் புகழ் பெற்ற சுற்றுலா ஸ்தலமான முதுமலை சரணாலயத்தில் 10-க்கும் மேற்பட்ட யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு, மற்றும் மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1987 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை

முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில், சென்ற மார்ச் மாதத்தில் இரண்டு யானைகள் மட்டுமே வேட்டைக்காரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளன. பிப்ரவரி மாதத்தில் ஒரு யானையும் சுட்டுக் கொல்லப்படவில்லை. ஜனவரி மாதத்தில் ஒரே ஒரு யானை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது. இந்த யானை வேட்டைக் குற்றங்கள் குறித்து தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதுவரை கிடைத்த தகவல்களிலிருந்து, இக்குற்றங் களுக்கு இரண்டு யானை வேட்டைக் கூட்டங்கள்தான் பொறுப்பெனத் தெரிய வருகிறது. இக்கூட்டத்தில் ஒன்றை 17—3—1987 அன்று சிறப்புப் படையினர் பிடித்துவிட்டனர். மற்றொரு கூட்டம் தலைமறைவாகியுள்ளது. இதையும் பிடிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. யானை வேட்டையைத் தடுக்க ரோந்து செய்யும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. முதன்முறையாக இரவு நேரங் களிலும் வனத்துறையைச் சேர்ந்த பழகிய யானைகளைக் கொண்டு ரோந்துப் பணி செய்யப்படுகிறது. கூடலூர் நில ஆக்கிரமிப்பு தொடர்பாக அங்கே முகாம் செய்துள்ள தமிழ்நாடு சிறப்புக் காவற்படையினரும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். காவல்துறையைச் சேர்ந்த வனக் குற்றப் புலனாய்வுப் பிரிவும் இதுகுறித்து தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

3. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பில் உள்ள புலனாய்வு பறக்கும் படைகளும் இதற்காக பயன்படுத்தப்பட்ட வுள்ளன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிறுவப் பட்டுள்ள விரைவு செய்தித் தொடர்புத் திட்டம் (Wireless System) சென்ற மார்ச் முதல் செயல்படுகிறது. தெப்பக்காடு, கூடலூர், உதகை மற்றும் கூனூரில் உள்ள நிரந்தர நிலையங்களும் "வயர்லெஸ்" கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களும் பயன் படுத்தப்படுகின்றன.

4. யானைகளை வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண் டுள்ள குற்றவாளிகளைக் கைது செய்து குண்டர்கள் சட்டத்தின் கீழ் (Goundas Act) காவலில் வைக்கலாம் என்று அரசு,

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், காவல்துறையினருக்கும் அறிவுரை வழங்கியுள்ளது. மேற்படி எடுக்கப்பட்டு வரும் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக யானை வேட்டைக் குற்றம் வெகுவாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில், 17—3—1987 அன்று வேட்டையாடும் கூட்டங்களில் ஒரு கூட்டம் பிடிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டத்தில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள்? அவர்களுக்கு தண்டனை ஏதாவது அளிக்கப் பட்டுள்ளதா? வேட்டையாடும் கூட்டத்தை நம்முடைய வனத் துறை அலுவலர்கள் நேரடியாக சந்திப்பதற்குப் பயப்படு கிறார்கள். அவர்களுக்கு, அந்த வேட்டையாடும் கூட்டத்தை சந்திக்க, அரசாங்கம் விலை உயர்ந்த, மதிப்பு வாய்ந்த துப்பாக்கிகளைக் கொடுப்பதற்கும், அந்தத் துப்பாக்கியால் அவர்களைச் சுடுவதற்கு அதிகாரம் கொடுப்பதற்கும் இந்த அரசு பரிசீலனை செய்து உடனடியாகக் கொடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல், முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் 10 யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டன என்று சொல்வது உண்மையல்ல. ஓராண்டுக் காலத்தில் 6—6—1986 முதல் 26—8—1987 வரையில் 5 யானைகள் சுட்டுக்கொல்லப்பட்டதுதான் உண்மை என்று விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே பிடிக்கப்பட்ட முதல் கூட்டத்தில் 3 பேர் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சம்பந்தப் பட்டவர்கள் தொடர்ந்து குற்றம் புரிபவர்களாக இருந்தால், குண்டர்கள் சட்டத்தில் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க ஏற்கனவே முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். இப்படி யானைகளைக் கொன்று தந்தம் எடுக்கிற குற்றத்தைத் தடுப்பதற்காக, சம்பந்தப்பட்ட வன அலுவலர்களுக்கு நவீன மயமான துப்பாக்கிகள் மற்றும் தொலைபேசி, கம்பியில்லாக் கருவிகள் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கே. உச்சி: பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 2 ஆண்டுகளுக்கு முன்னால் இதுபோன்ற கம்பியில்லாத் தந்தி போன்ற சாதனங்களை, 'வாக்கி டாக்கி' போன்ற பொருட்களை

அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் நானே கோரிக்கை விட்டேன். அதை உடனடியாகக் கொடுக்க வேண்டும். கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், அங்கே உள்ள அதிகாரிகளில் சிலர் சில தவறான தகவல்களை உங்களுக்குத் தந்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். கிட்டத்தட்ட மார்ச் மாதம் 16-ஆம் தேதி வரையில் நானே 3 யானைகளின் பிணங்களை நேரடியாகப் பார்த்தேன். அங்கே உள்ள மக்கள் சொல்வது எல்லாம், 10-க்கு மேற்பட்ட யானைகள்—சில நேரங்களில் 15 கூட இருக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த அதிகாரிகள், அந்தப் பகுதியிலே, மசினக்குடி, தெப்பக்காடு, தொரப்பள்ளி, வாழைத்தோட்டம் ஆகிய பகுதி மக்களோடு ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைத்தால்தான் அந்த விஷமிகளைக் கண்டுபிடிக்க முடியும். அந்த ஒத்துழைப்பிற்குப் பதிலாக சில ஆதிவாசிகளுக்கு நம்முடைய வனத்துறை அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள். அதிலே ஒருவர்தான் பொன்னன் என்கிற ஆதிவாசி. அவர் மீது தொல்லை கொடுத்து, பயங்கரமாக அடிக்கப் பட்டிருக்கிறார். ஆகவே, அந்த அதிகாரிமீது ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்களா; மக்களோடு ஒத்துழைத்து விஷமிகளைக் கண்டுபிடிப்பதற்காக ஏதாவது திட்டங்களை அவர்களுக்கு அளிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் அரசில், பொதுமக்கள் இதைப்போன்ற கடுமையான குற்றங்களைப் புரிவதைத் தடுப்பதற்கு அரசு அதிகாரிகளுக்கு உதவுவார்களானால், அதை நிச்சயம் வரவேற்பார்கள். அப்படி அத்துமீறி யாராவது துன்புறுத்தப்பட்டார்கள் என்ற தகவல் மாண்புமிகு உறுப்பினர் தேதி குறிப்பிட்டு, பெயர் குறிப்பிட்டு கொடுப்பாரானால், அதைப் பற்றி நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம். இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டதற்கு மாறாக, அதிகமான யானைகள் கொல்லப்பட்டது உண்மை, அதற்குத் தகவல் இருக்கிறது என்று தகவல் கொடுத்தாலும், அதுபற்றியும் அரசு நடவடிக்கை எடுக்கும்.